[1970 மார்ச் 24

ஹாஜி ம. மு. பீர்முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் நம்முடைய நாட்டிற்கு சுற்றுலா பயணிகள் மிக அதிகமான அளவுக்கு வருகிறார்கள். ஆகவே, இந்தச் சமயத்தில் கட்டண உயர்வு செய்வது நல்லதல்ல. ஆகவே, அந்தக் கட்டண உயர்வை நிறுத்தி, சுற்றுலா டாக்ஸிகளில் நான்குபேர் பிரயாணம் செய்யலாம் என்பதை மாற்றி, ஐவர் பிரயாணம் செய்ய அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, வெளிநாட்டுப் பயணிகள் அதிகமாக வருகிறார்கள் என்ற காரணத்தைக்கொண்டும், மோட்டார் வண்டிகளை இயக்குவதற்கும் பேணுவதற்கும் ஆகும் செலவுகளின் அடிப்படையைக் கொண்டும், மத்திய சர்க்கார் சிறுலா வாடகை மோட்டார் வண்டிகளின் கட்டண விதங்கள் நாடு முழுவதும் ஒரே சீராக இருக்க வேண்டுமென்று செய்த சிபாரிசின் பேரிலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

Mail bags carried by State Transport Buses.

* 525 Q. Thiru N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether postal mail bags of Posts and Telegraphs Department are being carried in the buses operated by the State Transport undertaking ; and

(*b*) if so, the rate of subsidy that the Posts and Telegraphs Department is paying to the State Government for the carriage of mails, etc., in the buses of the Tamil Nadu Transport Department?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) அஞ்சல்களை இம்மாநிலத்திலுள்ள பேருந்துகளில் எடுத்துச் செல்வதற்கான கட்டண விதங்களை நிர்ணயிப்பது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே அஞ்சல் பைகளை பஸ்ஸில் எடுத்துச் செல்வதற்கு ஒரு கிலோகிராமுக்கு ஒரு மைலுக்கு 4½ தம்பிடி என்று ஒரு கார்டு காலணாவுக்கு விற்ற காலத்திலே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்பொழுதுள்ள கால தேசவர்த்தமானத்தை உத்தேசித்து, மற்ற ஜில்லாக்களிலே போனால் ஒரு மைலுக்கு 5½ ரூபாய் என்றும், ஒரு போஸ்ட் ஆபீஸைத் தொட்டால் 2½ ரூபாய் என்றும் கட்டணம் வைத்தால், தேச உடைமையாக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துக்கு வருமானம் அதிகம் கிடைக்குமே இதன் பேரில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, தேச உடைமையாக்கப்பட்ட பஸ் வருமானத்திற்கு ஆலோசனை கூறிய கனம் உறுப்பினருக்கு என் நன்றியைத்

1970 மார்ச் 24]

தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென்ற அரசாங்க உத்தரவு ஜி. ஓ. 3030-ம் எண் 2—12—1969-ம் தேதியுள்ளதில் இந்தக் கட்டண விகிதங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. காலதேசவர்த்தமானத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைகளைப் பரிசீலித்து முடிவு எடுக்கப்படும்.

கோட்டவாசல் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, அஞ்சல் பைகள் தனியார் பஸ்களில் வருவதை மாற்றி, அரசாங்க பஸ்களில்தான் வரவேண்டும் என்று செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது அஞ்சலகத்தைத் தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய வேலையாகும்.

விருதுநகரில் அரசு போக்குவரத்து பணிமனை.

*526 வினா.—**திரு. பெ. சீனிவாசன்:** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகரில் அரசாங்க பேருந்துகளை பழுது பார்க்க புதிய பணிமனை கட்டும் உத்தேசம் உண்டா?

(இ) அதற்குரிய நிலம் வாங்க ஏற்பாடு செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) ஆம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: இப்படிப்பட்ட பணிமனைகள் வேறு எந்த எந்த இடங்களில் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன? பாளையங்கோட்டையில் ஒன்று கட்டி முடியும் தறுவாயில் இருக்கிறதே, அதன் திறப்பு விழாவுக்கு அமைச்சர் அவர்கள் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: திறப்பு விழாவுக்கு அழைப்பு அனுப்பினால் வருவதுபற்றி யோசிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: விருதுநகரில் கட்டப்பட இருக்கிற பணிமனை எப்போது துவங்கும்? எப்போது முடிக்கப்படும்? எத்தனை பேருந்துகள் பழுது பார்க்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: 75 ஏக்கரா நிலம் அக்வயர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருந்து அறிக்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்த பிறகுதான் முடிவு எடுக்கப்படும்.

மதுரையில் போக்குவரத்துத்துறை பணியாளர் வேலை நிறுத்தம்.

*527 வினா.—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் போக்குவரத்துத்துறைப் பணியாளர்கள் 1969 ஜூலை 17-ஆம் நாள் அளவில் வேலை நிறுத்தம் செய்தனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?